பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹூ மார்கழி மீ 08 உ ஞாயிற்றுக்கிழமை (23-12-1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 27

# கட்டுவனில் நேற்றுக் கடும் சண்டை;
# 10 படையினர் பலி! ஆயுதங்கள் மீட்பு!!

## முன்னேறும் முயற்சி முறியடிப்பு

யாழ்ப்பாணம், டிச.23

நேற்றுக் காலை 5.30 மணியளவில் கட்டுவன் பகுதியில் படையினர் முன்னேற முயன்றபோது கடும் சண்டை மூண்டது. கடும் சண்டையிலே 10 இரர்ணுவத்தினர் உயிரிழந்தனர்.

நண்பகல் ஒரு மணி வரை நடந்த மோதல்களை அடுத்து படையினரின் முன்னேறும் முயற்சி முறியடிக்கப்பட்டது. இந்தச் சண்டையின் போது பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் மீட்டனர்

கட்டுவனில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் காவல் அரண்களை அழிப்பதற்காக கட்டுவன் மினி முகாமிலிருந்து இராணுவத்தினர் முன்னேறியபோதே மோதல் மூண்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னேற முயற்சித்த இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கியதாகவும்—

இந்தச் சண்டையில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

சுமார் 7 மணி நேரம் இடம்பெற்ற மோதல்களை அடுத்து படையினர் முகாமுக்கு பின்வாங்கினர்.

மோதல்கள் நடைபெற்ற போது ஹெலிக்கொப்டர் ஒன்றும் அப்பகுதியில் கடும் தாக்குதல்களை நடத்தியது.

மோதல்கள் நடைபெற்ற சமயம் விமானங்கள் பல தடவைகள் பலாலி இராணுவ முகாமில் அடுத்தடுத்து தரையிறங்கிச் சென்றன.

மோதல்களில் படுகாயமுற்ற பெரும் எண்ணிக்கையான படையினர் இந்த விமானங்களில் ஏற்றிச் செல்லப்பட்டிருக்கக் கூடும் எனக் கருதப்பட்டது. (உ-68)

## நகரில் விழுந்த பலாலி ஷெல்கள்

யாழ்ப்பாணம், டிச. 23

நேற்று இரவு 8 மணி முதல் பலாலிப் பகுதியிலிருந்து பல தடவை ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் யாழ். கச்சேரி புங்கன்குளம் பகுதி, உரும்பராய் பகுதி ஆகியவை உட்பட பல இடங்களில் விழுந்து வெடித்தன.

ஷெல் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (உ-3)

## பதவி ஏற்று சில நிமிடங்களில் மந்திரி மரணம்

ஹைதராபாத், டிச. 23

மாநில அமைச்சராகப் பதவி ஏற்ற ஒருவர், பதவிப் பிரமாணம் செய்த சில நிமிடங்களில் மாரடைப்பால் மரணமானார்.

இச்சம்பவம் ஆந்திர மாநிலத் தலைநகர் ஹைதராபாத்தில் நேற்று இடம்பெற்றது. முதலமைச்சராக அண்மையில் பதவி ஏற்ற திரு. ஜனாதன் ரெட்டி நியமித்த புதிய அமைச்சரவை நேற்றுப் பதவி ஏற்றது.

அந்த அமைச்சரவையில் இடம்பெற்ற 17 அமைச்சர்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## 4 பெண் போராளிகள் உட்பட 7 வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், டிசம்பர் 23

கட்டுவனில் நேற்று இடம்பெற்ற மோதல்களின் போது நான்கு பெண் போராளிகள் உட்பட 7 விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்தனர்.

சாம்ஸன் [செல்வநாயகம் செல்வச்சந்திரன் - ஏழாலை வடக்கு), ஸ்டாலின் [துரைரட்ணம் பகீரதன் - யாழ்ப்பாணம்], அலன் [குருசாமி சிவராஜா-விஸ்வமடு] ஆகியோரும்-

பெண் போராளிகளான அஜித்தா [சுகுணராணி கந்தையா- சாவகச்சேரி], ஆஷா [யோகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை - புதுக்குடியிருப்பு], ரமா, ரதி கலா ஆகியோருமே நேற்று வீரமரணமடைந்தனர். [உ]

## புலிகள் மீட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், டிச: 23

கட்டுவனில் நேற்று இடம்பெற்ற மோதல்களின்போது பின்வரும் ஆயுதங்கள் தங்களால் மீட்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன:-

ஏ. கே. எல். எம் ஜி - 1, அதற்குரிய மகஸின் - 1, லிங் - 575 ஆகிய வையும்—

203 பிஸ்டல் (டொங்கான்) - 1, 40 எம்.எம். ஷெல் - 5, ரி - 56 ரகத் துப்பாக்கி - 3, அதற்குரிய மகஸீன்-7, ஐ. எம் ரவைகள் - 1,375, நேட்டோ ரவைகள் - 520, ஜி. எம். ஜி. பரல் - 1, ஜி. எம். ஜி. லிங் - 932, புகைக்குண்டு - 1 ஆகிய வையுமே மீட்கப்பட்டன. (உ)

## சிப்பாய் ஒருவரின் சடலமும் புலிகளால் மீட்கப்பட்டது

நேற்று கட்டுவனில் இடம்பெற்ற சண்டையின்போது கொல்லப்பட்ட பத்து சிப்பாய்களின் சடலங்களில் ஒன்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தச் சடலம் இன்று பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## ஷெல் குண்டு மாரி! வலி. வடக்கு அதிர்ந்தது

யாழ்ப்பாணம், டிச. 23

நேற்று அதிகாலை முதல் நண்பகல் வரை கட்டுவன், வறுத்தலை விளான், பலாலி ஆகிய பகுதிகளில் இருந்து படையினர் ஏவிய ஷெல் குண்டு மாரியினால் வலி. வடக்கு தொடர்ந்து அதிர்ந்தது.

ஷெல்லுக்கு இலக்காகி கிளானையைச் சேர்ந்த 60 வயது மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார். இரண்டு பேர் காயமுற்றனர்.

தலவன்கலட்டி பிள்ளையார் ஆலயம், தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் ஆகியவை உட்பட பல வீடுகள், கட்டடங்கள் பெரும் சேதமுற்றன.

அடுத்தடுத்து — நூற்றுக்கணக்கில் — ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் தெல்லிப்பழைச் சந்தி, குடும்பத்தான் கிளானை, கட்டுவன் உட்பட வலி. வடக்கின் பல பகுதிகளில் பெரும் சத்தத்துடன் விழுந்து வெடித்தன. (உ-19-3)

## மாங்குளம் வெற்றி மூலம் திருப்பம் ஏற்பட்டுள்ளது!

### பேச்சுவார்த்தைகளும் கூட வரலாம் என்கின்றார் ராஜன்

யாழ்ப்பாணம், டிச. 23

தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்தி வரும் ஒவ்வொரு தாக்குதலும், ஏதோ ஒரு விதத்தில் திருப்பத்தை ஏற்படுத்தி வந்திருக்கிறது.

அந்த வகையில் மாங்குளம் தாக்குதல் வெற்றியும் பெரும் திருப்பத்தைக் கொண்டு வந்துள்ளது. அந்தத் திருப்பத்தின் விளைவாக பேச்சுவார்த்தை கூட வரலாம். அதற்கான சூழ்நிலையை உருவாக்கியவன் கரும்புலி போர்க்.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ராஜன்.

மாங்குள முகாம் தகர்ப்பு வெற்றி விழாக் கூட்டம் நேற்று மாலை நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் நடைபெற்றது. அத்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு. ராஜன் மேற்கண்டவாறு கூறினார்.

கூட்ட ஆரம்பத்தில் வீரமரணமடைந்த போராளிகளுக்காக இரு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

திரு. ராஜன் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

மாங்குளம் வெற்றி விழாக் கொண்டாடும் இன்று மாவிட்டபுரம் தாக்குதலிலும் வெற்றி வாகை சூடியுள்ளோம்,

இன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்ட மாங்குளம் வெற்றி விழாவைக் குழப்புவதற்கு மாவிட்டபுரம் பகு

[2 ஆம் பக்கம் பார்க்க]

## கஜூவத்தை தாக்குதலில் 6 படையினர் உயிரிழப்பு!

### ஆயுதங்களும் புலிகளால் மீட்பு

யாழ்ப்பாணம், டிச.23

கடந்த வெள்ளியன்று மன்னார் மாவட்டத்தில் உள்ள கொண்டச்சி இராணுவ முகாமிலிருந்து ஒரு மைல் தூரத்தில் இருக்கும் கஜூவத்தை [முந்திரிகைத் தோட்டம்] இராணுவ முகாமுக்கு சென்ற இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கியதில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

எஞ்சியோர் இரண்டு இராணுவ முகாம்களுக்கும் தப்பி ஓடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலின் போது பெருமளவு ஆயுதங்கள் தங்களால் மீட்கப்பட்டதாகவும்-

இரண்டு போராளிகள் வீரமரணமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

நானாட்டானைச் சேர்ந்தவர்களான லெப்டினன்ட் ஜோதிரவி, சங்கிலியன் ஆகிய இரு போராளிகளுமே வீரமரணமடைந்தனர்.

இந்தத் தாக்குதலின் போது ஏ. கே. எல். எம், ஜி-1, அதற்குரிய றம் மகஸீன்-4, லிங்-375, ஹோல்ஸர்-2 ஆகிய

[2 ஆம் பக்கம் பார்க்க]

## பளை பொதுசந்தையில் விமானக் குண்டு வீச்சு!

தென்மராட்சி. டிச 23

பளை பொதுச் சந்தையில் நேற்றுநண்பகல் 11.30 மணியவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

குண்டுகள் நகரை அண்டிய பகுதிகளில் விழுந்து வெடித்ததில் பளை மகாவித்தியாலய ஆரம்ப பாடசாலை, சைக்கிள் கடை ஒன்று, மரக்காலை ஒன்று மற்றும் இரு வீடுகள் ஆகியன சேதம் அடைந்தன.

சந்தையில் கூடி நின்ற மக்கள் பொம்மர்கள் வட்டமிட்ட போதே பாதுகாப்பான இடங்களுக்கு ஓடித் தப்பியதால் உயிராபத்து தவிர்க்கப்பட்டது.

இந்தத் தாக்குதல்களின் பின்னர் பொம்மர்கள் இரண்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## மாணவர்கள் பலரும் நேற்று இரத்ததானம்

யாழ்ப்பாணம், டிச 23

மாங்குளம் இராணுவ முகாம் தாக்குதல் வெற்றி நாளை முன்னிட்டு நேற்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பலர் யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இரத்த தானம் செய்தனர்.

பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டின்படி தொடர்ந்து இன்றும் அவர்கள் இரத்ததானம் செய்யவுள்ளனர்.

இதேவேளை—

மேஜர் முரளி ஞாபகார்த்த

[2 ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவில் நடுநிசி நேரம் பொம்மர்கள் குண்டு வீச்சு!

தென்மராட்சி, டிச. 23

நேற்று முன்தினம் [வெள்ளிக்கிழமை] நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் ஆனையிறவு, இயக்கச்சிப் பகுதிகளில் இரண்டு பொம்மர்கள் பெரும் இரைச்சலுடன் வந்து குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

[illegible] ஆறுக்கும் அதிகமான குண்டுகள் பெரும் சத்தத்துடன் விழுந்து வெடித்தன.

குடியிருப்பு இல்லாத பகுதிகளில் இந்தக் குண்டுகள் விழுந்ததால் உயிர்ச்சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை.

இதனைத் தொடர்ந்து நேற்று அதிகாலையில் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து தொடர்ந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்று நண்பகலிலும் ஆனையிறவுப் பகுதியில் பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன. ஆனால் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து தகவல் ஏதும் இடைக்கவில்லை. [உ-117]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பாடசாலை செல்லாவிடில் பெற்றோர்கள் மீது நடவடிக்கை

## விரைவில் சட்டம் வருகிறது

கொழும்பு, டிச. 23

ஐந்து வயதுக்கும் பதினாறு வயதுக்கும் இடைப்பட்ட மாணவர் பாடசாலைக்குச் செல்வதை கட்டாயப்படுத்தும் சட்டம் ஒன்றைகொண்டு வர அமைச்சரவை தீர்மானித்து உள்ளது.

இது தொடர்பான சட்ட மூலம் அடுத்த ஆண்டு பெப்ர வரியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

குறிப்பிட்ட வயது வரை தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பத் தவறும் பெற்றோர் அல்லது பாது காவலர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் புதிய சட்டம் அதிகாரம் வழங்குகிறது. [ஒ எ]

## கொட்டும் மழையிலும் நேற்று

## மாங்குளம் வெற்றி நாள் குடாநாட்டில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், டிச. 23

கொட்டும் மழையின் மத்தியிலும், மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பு வெற்றி நாளும், கரும்புலி லெப். கேணல் போர்க்கின் நினைவு தினமும் நேற்று யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டன.

இவற்றை ஒட்டி குடாநாட்டின் அநேக வீதிகள் சிவப்பு, மஞ்சள் நிற சோடனைகளால் அலங்காரமாகக் காட்சி அளித்தன.

முக்கிய இடங்களில் கரும்புலி லெப். கேணல் போர்க்கின் பெரிய அளவிலான படங்கள் வைக்கப்பட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

பல இடங்களில் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன.

விடுதலைப் புலிகள் பெரிய அளவிலான பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டிருந்தனர்.

அதில் கரும்புலி போர்க் வெடிகுண்டு தாங்கிய வாகனத்துடன் சென்று மாங்குளம் முகாமைத் தகர்த்தெறியும் சித்திரம் வரையப்பட்டுள்ளது. (ஒ-6)

## பம்பைமடு இராணுவத்துடன் விடுதலைப்புலிகள் கடும் சமர்

வவுனியா மாவட்டம், பாவற்குளம் முகாம் இராணுவத்தினர் நேற்று முன்தினம நண்பகல் பம்பைமடுச் சந்திக்கு வந்தபோது, அவர்களை வழிமறித்து விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

நண்பகல் ஒரு மணியில் இருந்து 2 மணிவரை நடந்த கடும் மோதலை அடுத்து படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

பாவற்குளம் முகாமுக்குத் திரும்பிக்கொண்டிருந்தபடையினர், இடையில் அகப்பட்ட பொதுமகன் ஒருவரைச் சுட்டுக்கொன்றனர்.

சண்டை நடந்த பகுதியில் இருந்து ஏ. கே. ரவைக் கூடு -3. ரவைகள்-90, போன் றவை கைப்பற்றப்பட்டன என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலின்போது படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து தெரிய வரவில்லை

விடுதலைப் புலிகள் தரப்பில் எந்தச் சேதமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

பம்பைமடு முகாமுக்குத் திரும்பிய இராணுவத்தினர் பம்பைமடு, நெலுக்குளம் ஆகிய குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

அதனால் இப்பகுதிகளில் இருந்து சுமார் 75 குடும்பங்கள் கிடாச்சூரி பாடசாலையில் தஞ்சம் புகுந்தன.

அதே சமயத்தில் வவுனியா நகரில் உள்ள சாமினி, ஜோசப் வித்தியாலயங்களில் உள்ள படையினரும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.


## கண்ணீர் அஞ்சலி

அமரராகிவிட்ட கூட்டுறவுத் துறையின் ஒளிவிளக்கு

**சண்முகம் ஞானப்பிரகாசம்**

அவர்களுக்கு

நல்லூர் கந்தன் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தினரும்
நல்லூர் கந்தன் உலர்வலய சங்கத்தினரும்
நல்லூர் சமூக நலன் ஒன்றியத்தினரும்
யாழ். மாவட்ட கூட்டுறவு மகளிரும்
தங்கள் இதய அஞ்சலியைச் செலுத்துகின்றனர்.

[14869]



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் சிவகுரு கனகரத்தினம்**

[இளைப்பாறிய விவசாய உப அதிபர்]

தோற்றம்: 10-10-1914



மறைவு: 23-12-1989

உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், தம்பி டாக்டர் சபாரத்தினம்
மைத்துனர்கள், மைத்துனி
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

200, 1 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (15192)


## மேஜர் முரளி ஞாபகார்த்த பாலர் பாடசாலை

யாழ்ப்பாணம், டிச. 23

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க முன்னாள் பொறுப்பாளர் மேஜர் முரளியின் ஞாபகார்த்தமாக இன்று முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் பொற்பதி வீதியில் பாலர் பாடசாலையும், படிப்பகமும் திறந்து வைக்கப்பட உள்ளன.

மேஜர் முரளியின் தாயார் இவற்றைத் திறந்து வைப்பார். [ஒ[

## தனியார் கல்வி நிறுவன பிரதிநிதிகள் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், டிச. 23

மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய மேஜர் முரளியின் நினைவு எழுச்சி நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அனைத்து தனியார் கல்வி நிறுவனப் பிரதிநிதிகளும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கூடுகின்றனர்

கல்வி நிறுவனங்களின் மாணவர்களும் அங்கு வருகை தரவுள்ளனர். [ஒ-6]

### களுவத்தை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வையும்-

ரி-56 ரகத் துப்பாக்கி-3, அதற்குரிய மகஸீன்-12 ஜே. ஆர் ரக கைக்குண்டு-3, ஐ. எம். ரவைகள்-1,350, பைனற் [கத்தி]-1 ஆகியவையுமே புலிகளால் மீட்கப்பட்டன. [உ]

### மாணவர்கள்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிகழ்ச்சிகளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினரும் நேற்று இரத்ததானம் செய்தனர்.

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 28 மாணவர்களும் இரத்தம் வழங்கினர். (ஒ-5-15)

### பளை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டும் ஆனையிறவு முகாம் பகுதியில் குண்டுகளை வீசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வீச்சில் காயமுற்ற [உரும்பராய் வடக்கைச் சேர்ந்த செல்லையா சண்முகதாஸ் [50 வயது] யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [உ-117]

### பதவி ஏற்று..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களில் ஒருவர் ரவீந்திரநாத் சௌத்திரி,

இவர் பதவி விலகிய சென்னாரெட்டியின் அமைச்சரவையிலும் இடம்பெற்றிருந்தார்.

திரு. சௌத்திரி நேற்று அமைச்சராகப் பதவி ஏற்ற சிலமணி நேரங்களில் மாரடைப்புக்கு இலக்காகி மரணமானார். (உ-எ)

## ஆஸ்பத்திரியில் இன்று சிரமதானம்

யாழ்ப்பாணம், டிச 23

மாணவர் எழுச்சி தினத்தையும், மேஜர் முரளியின் நினைவு தினத்தையும் முன்விட்டு இன்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் யாழ் போதனா ஆஸ்பத்திரியில் சிரமதான வேலைகளில் ஈடுபட உள்ளனர்.

பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. [ஒ-6]

## வாழைச்சேனையில் 9 தமிழர் படுகொலை

யாழ்ப்பாணம், டிச. 23

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனையில் கடந்த திங்கட்கிழமை ஒன்பது அப்பாவித் தமிழர்கள் ஊர்காவல் படையினரால் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வாழைச்சேனையைச் சேர்ந்த நல்லதம்பி கந்தசாமி [37 வயது], ஆறுமுகம் நடராசா [27 வயது], நல்லதம்பி பாலையா [31 வயது] ஆகியோரும் கொலை செய்யப்பட்டவர்களில் அடங்குகின்றனர்.

ந. கந்தசாமி 5 பிள்ளைகளின் தந்தை என்றும் ந பாலையா ஒரு பிள்ளையின் தந்தை என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## காஞ்சிபுரத்துக்கு சந்திரசேகர்

புதுடில்லி, டிச. 23

இந்தியப் பிரதமர் சந்திரசேகர் எதிர்வரும் 25 ஆம் திகதி காஞ்சிபுரம் சென்று காஞ்சி பெரியஸ்வாமிகளை சந்திக்க இருக்கிறார். [ஒ-எ]

## எழுச்சி ஊர்வலம், கூட்டம்; மாணவர் அமைப்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 23

மாணவர் அணி ஒன்றை கட்டி வளர்ப்பதில் முன்னின்று உழைத்த மேஜர் முரளியின் நினைவாக இன்று எழுச்சி ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்குவிடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இன்றைய எழுச்சி தினத்தில் மேஜர் முரளி உட்பட அவர் வழியில் சென்ற மாணவர்களையும் நினைவு கூர்ந்து நினைவுக் கூட்டம் ஒன்றும் நடைபெற இருக்கிறது

இன்றைய தினத்தை மாணவர்கள் எழுச்சி நாளாக கொண்டாட இருக்கின்றனர். எழுச்சி நாள் நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் செய்துள்ளது.

1987 ஆம் ஆண்டில் டிசம்பர் 23 ஆம் திகதி இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் களப்பலியான மேஜர் முரளி மற்றும் கப்டன் சாந்தி, லெப். தர்ஷினி, நிர்மலா, பஞ்சன், அமுதன், சதா. நிகிந்தா, நிரா. நிதி ஆகியோருக்கும் இன்றைய தினத்தில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினர் வீரவணக்கங்களைச் செலுத்துகின்றனர். (ஒ)

## கப்டன் காந்தி நினைவுக் கூட்டம்

விடுதலைப் புலிகளின் கோப்பாய் பிரதேச முன்னாள் பொறுப்பாளர் கப்டன் காந்தியின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று மாலை 6 மணிக்கு கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத் திறந்த வெளி அரங்கில் நடைபெற இருக்கிறது. [ஒ 30]

### மாங்குளம்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தியில் வெளியேறிய இராணுவத்தினரை பெரும் இழப்புக்களுடன் திரும்ப வைத்துள்ளோம்.

எமது வரலாற்றை சற்றுத் திரும்ப நோக்கினால், ஒவ்வொரு தாக்குதல் சம்பவமும் ஒவ்வொரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டுவருகிறது.

யுத்தத்தின் நடுவே பேச்சுவார்த்தைகள் என்று வந்தாலும் கூட, நிலையான தீர்வுக்குத் தமிழீழம் தான் ஒரே வழி என்ற எண்ணமும் நம்பிக்கையும் மக்களுக்கு ஏற்பட வேண்டும்- என்றார்

யாழ் மாவட்ட பிரசாரச் செயலாளர் திரு ஆஞ்சநேயர் பேசுகையில் கூறியதாவது:-

மாங்குளம் தாக்குதல் வெற்றி சர்வதேச மட்டத்தில் எம்மை உயர்ந்த நிலையைத் தேடித்தந்துள்ளது. எம்மை அங்கீகரிக்கத் தயாராக இருந்த நாடுகள் செயலில் இறங்கவும், எம்மை அங்கீகரிக்கத் தயங்கிய நாடுகள் அங்கீகரிக்க தயாராகும் நிலையையும் மாங்குளம் தாக்குதல் ஏற்படுத்தி உள்ளது.

மாங்குளம் தாக்குதல் எமது போராட்டத்தில் புது அத்தியாயம் ஒன்றைப் படைத்துள்ளது- என்றார்.

திரு. தேவர், சங்கீதன் உட்படப் பலர் உரையாற்றினர். மாங்குளம் தாக்குதல் வீடியோ படமும் காண்பிக்கப்பட்டது. [அ-3-5]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி தமயந்தி சிறிரவீந்திரா

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி தமயந்தி சிறிரவீந்திரா கடந்த 19-12-90 இல் காலமானார். இவர் சிறிரவீந்திராவின் (பல்கட்டுனர்-பேராதனைப் பல்கலைக்கழகம்) அன்பு மனைவியும், திரு. திருமதி சி. குலசிங்கத்தின் [இளைப்பாறிய கணக்குப் பரிசோதகர்] அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. இராசரெத்தினம் [காணி அபிவிருத்தி அதிகாரி] திருமதி இராசரெத்தினம் ஆகியோரின் மருமகளும் ஆவார். இவரின் ஈமக்கிரியைகள் 23-12-90 ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று சொக்துவில் மயானத்தில் தகனம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு இந்திரன்.

"சிவஸ்தன்"
கொக்குவில் மேற்கு. [15253]

### கதிரவேலு நல்லையா

இளைப்பாறிய திரு கதிரவேலு நல்லையா [மாசிகன்று நல்லையா] 22-12-90 இல் காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகளைப் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. கணேசலிங்கம்

கோறாவலை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [14870]

### திருமதி தம்பு புவனேஸ்வரி

புங்குடுதீவு, 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி தம்பு புவனேஸ்வரி காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தம்பு (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், சிவபாதசுந்தரம், சவுந்தரநாயகம், தியாகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவஞானவதி, சோரதகௌரி ஆகியோரின் அன்பு மாமியும் இராசநாயகம், பிரபாகரன், பிரதிபன், சுதா, ஜனா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23-12-90) காலை 10 மணிக்கு மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
த. சிவபாதசுந்தரம்
(15264)

### செல்வன் தனபாலசிங்கம் பிருந்தன்

செல்வன தனபாலசிங்கம் பிருந்தன் நேற்றுக் காலமானார். அன்னார் தனபாலசிங்கம் [யாழ். மாநகர சபை], யோகேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், தனுசாவின் சகோதரரும், திருமதி முத்தையா நல்லம்மா, விஜயரட்ணம் பரமேஸ்வரி (சரசாலை) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பி. ப. 3 00 மணிக்கு நல்லடக்கத்திற்காக கோம்பயன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம்

தகவல்:
மு. தனபாலசிங்கம்

4, சீனியர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை. [14871]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-12-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பகிரங்க லைசென்ஸ்!

கிழக்குப் பிராந்தியத்தில் ஒரு நாளில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களை அரச படைகள் கைது செய்திருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. கிழக்கில் புதிதாக இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி இருப்பதாக கூறிக்கொண்டு அரசாங்கம் தனது வழமையான அட்டூழியங்களைத் தொடங்கி இருக்கிறது!

தமிழர் பிரச்சினை என்று வரும்போது அரசாங்கத்துக்கு எப்போதும் கிழக்கின் மீது கூடுதல் கண். அங்கிருந்து தமிழர்களை விரட்ட வேண்டும் அல்லது ஒழித்து விட வேண்டும் என்பது அதன் நோக்கம். 1983 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே, இந்த நோக்கத்தை எய்துவதற்குப் படிப்படியாக, தடவைக்குத் தடவை அரசுகள் பல்வேறு அணுகுமுறைகளையும், உத்திகளையும் கையாண்டு வருகின்றன.

முறைக்கு முறை நடக்கும் வன்செயல்கள், இராணுவ நடவடிக்கைகளின் போது தமிழர் எண்ணிக்கை கிழக்கில் குறைக்கப்பட்டுவருகிறது.

இவ்வருடம் ஜூன் மாதம் அரசாங்கம் பிரகடனம் செய்த யுத்தத்தின் ஆரம்பத்தில், கிழக்கு வாழ் தமிழ் மக்கள் பட்ட வேதனைகள், அவலங்கள் சொல்லுந் தரமற்றவை. ஆயிரக் கணக்கானோர் ஆயுதப்படையினராலும், ஊர்காவற்படையினராலும் ஈவிரக்கம் இன்றி, வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டனர். அவர்களின் பிடியிலிருந்து தப்பியவர்களும் மரணத்தின் தறுவாயிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கிழக்கின் பல கிராமங்களைச் சேர்ந்த தமிழர்கள் சொந்த வீடுகளில் இருக்க முடியாது. இடம்பெயர்ந்து செல்வதும் கஷ்டம். அகதி முகாம்கள் என்றால் அவற்றிலும் உயிர்ப் பாதுகாப்பு இல்லை. அந்த ஆபத்தையும் பொருட்படுத்தாது முகாம்களில் தங்கினாலும் உணவு வசதி இல்லை; மருந்து வசதி இல்லை. தொற்றுநோய்கள் வந்து இயற்கை மரணங்களும் அதிகரிக்கின்றன.

உயிருக்கு அஞ்சிக் காடுகளில் தஞ்சம் புகுந்தவர்களின் நிலைமையோ பரிதாபத்துக்கு உரியது. மனித உரிமைகள், மனித அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாது அவர்கள் மரணத்தை எதிர்நோக்கி இருக்கிறார்கள். மழை, வெள்ளம், பசி, பட்டினி, நோய் போன்ற இயற்கை அனர்த்தங்களால் அவர்கள் படும் அவஸ்தைகளும் அளப்பில.

இத்தகைய சூழ்நிலையில் கிழக்கில் மீண்டும் 'ஒழித்துக் கட்டல்' என்ற பெயரில் அரசப்படைகள் இராணுவ நடவடிக்கையைத் தொடங்கி உள்ளன. தமிழர்களில் ஆயிரக்கணக்கானோரை ஏற்கனவே ஒழித்துக்கட்டிய கூலிப்படைகளுக்கு, இப்போது முற்றாகச் செய்து முடிக்கப் பகிரங்கமாகவே லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளது!

எனவே இம்முறை கிழக்கில் இராணுவ அட்டூழியங்கள் அந்தமில்லாமல் நடக்கப் போகின்றன. ஒரு நாட்டை ஆளும் அரசாங்கம் ஒரினமயப் பட்டதன் பாதகமான விளைவு தெரியவருகிறது. இது குறித்து உலகநாடுகள் உன்னிப்பாகக் கவனத்தில் எடுத்துப் பகிரங்க இனஒழிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டியகாலம் வந்துவிட்டது!

## விசர் நாய்க்கடி: நோயாளர் படுபாடு!

சாவகச்சேரி, டிச.23

யாழ். போதனா வைத்தியசாலையில் விசர் நாய்க்கடி தடுப்பூசி போட்ட சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த சிலர் திரிசங்கு நிலையில் இருக்கின்றனர்

யாழ். போதனா வைத்தியசாலையில் முதல் ஊசி போட்ட பின்னர், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் ஏனைய ஊசிகளைப்போடும்படி இவர்களிடம் தெரிவிக்கப்பட்டதாம்.

ஆனால் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது யாழ்.ஆஸ்பதிரிக்குச் சென்றே தொடர்ந்து ஊசி போடும்படி கூறப்பட்டது.

இந்த இழுபறியில் 2 ஆம் ஊசி போடும்நாள் கடந்துவிட்டதாகச் சிலர் தெரிவித்தனர்.

பிரயாணக் கஷ்டத்தால் தொடர்ந்து ஊசி போடமுடியாத நிலையும் சிலருக்கு ஏற்பட்டுள்ளது. [இ-31]

## நாவலர் குருபூசை

நாவலர் குருபூசை விழா கடந்த 14 ஆம் திகதி நாயன்மார்க்கட்டில் வித்துவான் க.சொக்கலிங்கம் [சொக்கன்] தலைமையில் நடைபெற்றது.

அகிலஇலங்கைத் திருமுறை மன்றமும், சைவ அபிவிருத்திக் கழகமும் இணைந்து இதனை நடத்தியிருந்தன. [இ-6]

# மட்டக்களப்பில் மீன்பிடித் தொழில் பெரும் அளவு பாதிப்பு

## இதுவரை 250 படகுகள்சேதம்

மட்டக்களப்பு, டிச. 23

இராணுவ நடவடிக்கைகளால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 250 மீன்பிடிப் படகுகள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. இதனால் அம் மாவட்டத்தில் கடற்றொழில் பெரும் அளவு பாதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 500 படகுகள் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வந்தன, தற்போது இதில் 50 சதவீதமான படகுகள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன.

படையினரின் நடவடிக்கைகள், கட்டுப்பாடுகள் காரணமாக இப்போது கூட மீனவர்கள் சுயமாக மீன்பிடிக்க முடிவதில்லை.

ஆழ்கடல் மீன்பிடி தடை செய்யப்பட்டுள்ளது:

இதனால் உள்ளூர் மீன் தேவையைக் கூட சமாளிக்க முடியாதுள்ளதுடன், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களும் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். [இ-6]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 23

'வடக்கில் நிலவும் போர்க்கால சூழ் நிலையில் பெண்களின் பங்களிப்பு' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று ஞாயிறுபிற்பகல் ஒரு மணி அளவில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையம் மேற்படி கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது. [இ-5]

## போராளிகள் விவகாரம்:

## எம். பிக்கள் குழுவை அனுப்ப கோருகிறார் சிதம்பரம்

சென்னை, டிச.23

தமிழகக் கடலோரப் பகுதிகளுக்கு விஜயம் செய்து, அங்கு இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் நடமாட்டம் பற்றி நேரில் அறிந்து கொள்ள, நாடாளுமன்ற உறுப்பினர்களின் தூதுக்குழு ஒன்றை மத்திய அரசு அனுப்பி வைக்கவேண்டும்.

முன்னாள் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் சென்னையில் செய்தியாளரிடம் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

இத் தூதுக்குழுவுடன் மத்திய, மாநில அரசு அதிகாரிகள் செல்லக்கூடாது என்றும்- கடலோரப்பகுதி மக்களிடம் இருந்து இலங்கைப் போராளிகளின் நடமாட்டம் பற்றி உண்மைத் தகவல்களை பெற குழு முயற்சிக்க வேண்டும் என்றும் திரு. ப. சிதம்பரம் மேலும் சொன்னார். [இ-எ]

## உள்ளகத் தொலைபேசிகள் முழு அளவில் இயங்குகின்றன

யாழ்ப்பாணம், டிச.23

யாழ். போதனா வைத்தியசாலை உள்ளகத் தொலைபேசிகள் மீண்டும் கடந்த வியாழன் முதல் முழுமையாக இயங்கத் தொடங்கியுள்ளன.

சுமார் 100 உள்ளகத் தொலைபேசித் தொடர்புகளை உடைய இந்த தொலைபேசித் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் கடந்தகால இராணுவ நடவடிக்கைகளின் போது முற்றாக சேதமடைந்தும், திருட்டுப்போயும் இயங்கமுடியாத நிலையில் இருந்தன.

யாழ். தொலைத்தொடர்பு ஊழியர்களின் துரித செயற்பாடுகளினால் குறுகிய காலத்தில் திருத்த வேலைகளை மேற்கொள்ள முடிந்தது என்று யாழ். தொலைத்தொடர்பு அதிகாரி ச. பாஸ்கரன் தெரிவித்தார். [இ-15]

## கட்டணம்

பெண்களின் சிகை அலங்காரத்துக்கான புதிய கட்டணம் 35 ரூபா.

வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

இம் மாதம் 20 ஆம் திகதி புதிய கட்டணம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அது அறிவித்துள்ளது.

இதன்படி ஆண்கள் தலைமுடிக்கு ரூபா 15, தலைமுடிக்கும் முகச் சவரத்துக்கும் ரூபா. 20, முகச்சவரத்துக்கு மட்டும் ரூ. 7, சிறுவர் தலைமுடிக்கு ரூ. 10 சிறுமியருக்கு ரூ. 15 (இ-51)

# உலகச் செய்திகள்

## படை வாபஸ் இல்லை என்கிறார் ஹுசேன்

பக்தாத், டிச.22

ஐ.நா விதித்த காலக்கெடுவான ஜனவரி 15க்கு முன் குவைத்தில் உள்ள ஈராக்கிய படைகள் வெளியேற மாட்டா.

ஜனாதிபதி சதாம் ஹுசேன் டெலிவிஷனில்பேசுகையில் முன்கண்ட அறிவிப்பை வெளியிட்டார்.

போர் ஒன்று வந்தால் நிச்சயம் ஈராக் வெற்றியீட்டும் என்றும் ஜனாதிபதி சொன்னார். [இ-எ]

## பாண்டிச்சேரியில் எம். எல். ஏ. பதவி நீக்கம்

புதுச்சேரி, டிச, 22

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியின் ஒருகட்டமாக வி. பி. சிங்.தலைமையிலான ஜனதா தள் கட்சியில் இருந்து விலகிய 3 எம். எல். ஏக்களின் இருவரை கட்சித்தாவல் தடைச்சட்டத்தின் கீழ் சபாநாயகர் பதவி நீக்கம் செய்தன்னார்.

இந்த மூன்று எம். எல் ஏக்களும் ஜனதா தள் சோஷலிஸ்ட் கட்சியில் சேர்ந்ததை கட்சி பிளவுபட்டதாக எடுத்துக் கொள்ள முடியாது என்று சபாநாயகர் பழனிராஜா அறிவித்தார்.

## இ.காங்கிரஸ் அ.தி.மு.க. கூட்டணி

சென்னை,டிச.22

தமிழ்நாடு சட்டசபைக்கு பொதுத் தேர்தல் ஒன்று நடப்பின், அதில் இந்திரா காங்கிரஸும் அ.தி.மு.கவும் கூட்டணி அமைத்து போட்டியிடும்.

தேர்தலில் இக்கூட்டணி வெற்றி பெற்றால் யார் முதலமைச்சராவது என்பதை திரு.ராஜீவ்காந்தியும்,செல்வி ஜெயலலிதாவும் தீர்மானிப்பார்.

இப்படி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்தார். (இ-எ)

## யாழ். பல்கலைக்கழகத்தில் விரைவில் கம்பியூட்டர்துறை

யாழ்ப்பாணம், டிச.23

யாழ். பல்கலைக்கழகத்தில் கம்பியூட்டர் துறையை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி அளித்துள்ளது.

முன்னர் கம்பியூட்டர் பிரிவே யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கி வந்தது.

தற்போது கம்பியூட்டர் துறை ஆரம்பிக்க இருப்பதால் அதற்குத் தேவையான விரிவுரையாளர்கள், உபகரண வசதிகள் முதலானவற்றை விரைவில் ஏற்படுத்தித் தருமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவை யாழ். பல்கலைக்கழகம் கேட்டுள்ளது. [இ-3]

## கிழக்கு அகதிகளுக்கு உதவி

வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் குறைந்தபட்சம் தமது ஒரு நாள் சம்பளத்தை கிழக்கு மாகாண அகதிகளுக்கு வழங்குவதென தீர்மானித்துள்ளனர்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைகளுக்கு உட்பட்ட காங்கேசன்துறை, மயிலிட்டி, தெல்லிப்பழை, மல்லாகம் ஆகிய உப அலுவலக ஊழியர்கள் அடங்கிய விசேஷ கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு வலிகாமம் வடக்கு பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு.வி.இராசையா தலைமை வகித்தார். (இ-90)

## குடத்தனை - அம்பனில் மரமுந்திரிச் செய்கை

பருத்தித்துறை, டிச. 23

குடத்தனை, அம்பன் ஆகிய பகுதிகளிலுள்ள அரச காணிகளில் மரமுந்திரிச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது:

அம்பன் உற்பத்திக்குழு, இப்பகுதியிலுள்ள படித்த வாலிபர், யுவதிகளுக்கு இப்பகுதியிலுள்ள அரசகாணிகளை உதவி அரசாங்க அதிபரின் அனுமதியுடன் மரமுந்திரிச் செய்கைக்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதென உற்பத்திக்குழுத் தலைவர் திரு: சி. தனபாலசிங்கம் தெரிவித்தார். (இ-118)

## பாடசாலை அகதி முகாம்களுக்கு அதிகாரிகள் குழு

யாழ்ப்பாணம், டிச.23

பாடசாலைகளில் உள்ள அகதி முகாம்களை வேறு இடங்களுக்கு மாற்றுவது சம்பந்தமாக ஆராய்வதற்காக அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று, எதிர்வரும் 29 ஆம் திகதி வரை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு நேரடியாக விஜயம் செய்ய இருக்கின்றது:

இவர்களின் முடிவின் பின்னரே பாடசாலைகளில் இயங்கும் அகதி முகாம்களை மூடுவதா, இல்லையா என்பது சம்பந்தமான இறுதி முடிவு எடுக்கப்பட இருக்கிறது. [ஓ-6]

# யு. எஸ். எயிட் நிறுவனம் மூலம் விவசாய அபிவிருத்தித் திட்டம்

"யு. எஸ். எயிட்" நிறுவனம் யாழ். மாவட்டத்தில் அடுத்த மாதம் தொடக்கம் விவசாய அபிவிருத்தி திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களில் நான்கு நிறுவனங்களைத் தெரிவு செய்து அவற்றின் ஊடாகவே இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப் படவிருக்கிறது.

விவசாய உற்பத்திக்குதேவையான [illegible] ஆகியவற்றை இந்தத் திட்டத்துக்காக அந்த நிறுவனம் வழங்க இருக்கிறது.

நவீன முறையில் விவசாயத்தை [மேற்கொள்ளத் தேவையான ஆலோசனைகளையும் அந்த நிறுவனம் [illegible] இருக்கிறது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்துநாளும் பத்தியத் திருநாளே!

திருவெம்பாவைத் தினங்கள் மார்கழித் திருவாதிரைக்கு முன் உள்ள பத்து நாட்களுமாகும்.

அன்னை பராசக்தியை வியந்து கன்னிப்பெண்கள் அதிகாலையில் குளித்து அம்மையப்பனை நினைந்து ஒருவரையொருவர் துயில் எழுப்பி நாடு செழிக்கவும் தமது சொந்த வாழ்க்கைக்கு நல்ல கணவர் கிடைக்கவும் வேண்டும் வழிபாடாக இது அமைந்தது.

சுப வாழ்விற்கும் பொது வாழ்விற்குமான பிரார்த்தனையே திருவெம்பாவை வழிபாடாகும். முன்னி அவன் நமக்கு முன் கரக்கும் இன்னருளே என்னைப் பொழியாய் மழையேலோரெம்பாவாய் என்றும், உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம் அன்னவரே எங்கணவர் ஆவார் என்றும், எம் கொங்கை நின் அன்பரல்லாதோர் சேரற்க என்றும் பாடி மார்கழி மகளிர் நீராடும் காட்சியை மணிவாசகர் மாட்சிமைப் படுத்தியுள்ளார்.

மனித மனங்களை, குணங்களை, பொறிப்புலன்களை, தெளிவாக்கி ஆரோக்கியமாக்குவதற்கும், பாடல் நெறியால் மனிதன் பண்பட முடியும் என்பதற்கும் இப் பத்து நாற்பாடல் வாழ்வும் அநுபவமாய் அமைகின்றது. 'சைவ சமயிகளுக்கு மட்டுமல்லாது மனிதர்கள் எல்லோருக்கும் உகந்த பத்தியத்திருநாளே பக்தி வழிகாட்டும் இத் திருவெம்பாவை நாட்கள்.

திருவெம்பாவையில் கன்னிப் பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பி எழுப்பி வழிபாட்டிற்குத் திருக்கூட்டம் சேர்க்கிறார்கள். எந்தோழி நேரிழையாய், ஏலக்குழலி, மானே, அன்னே, எம்பாவாய் வன்நெஞ்சப் பேதையர்போல் வாளாகிடத்தியால், என்று பாடிப்பாடி ஒவ்வொருவர்

### திருவெம்பாவை சிறப்பம்சம்

நெருக்கமும், இணக்கமும், அன்புப் பிணைப்பும் எத்தகையது என்பதனை வெளிப்படுத்துகிறார்கள்;

விழித்தெழுந்த எல்லோரும் சேர்ந்து சிவனை முன்னிலைப்படுத்தி புகழ்ந்துபாடி பக்தியை வியந்தமை திருவெம்பாவையால் திகழ்கின்றது.

புலவர்:-

ஈழத்துச்சிவானந்தன்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இனம் Jersey பசு 9 போதிதல் பால் தரக் கூடியது 18-12-90 அன்று கன்று ஈன்றது. நல்ல இன ஆடு இரு நேரம் இரு போத்தல் பால் தரக்கூடியது. இரு கிழமைக்குள் குட்டி போடக்கூடியது. தொடர்பு: க. தியாகராசா, சத்திய காட்டுச் சந்தை வீதி, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். (15147)

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்ஸ்" இல. 338 A, பருத்தித்துறை வீதி, நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (15000)

### தேவை

6'5''x6'5'' அளவுடைய தகடு பொருத்திய புதிய அல்லது பாவித்த சுருக்குக் கதவு தேவை. தொடர்பு:- இலங்கை செஞ்சிலுவை சங்கம், கண்டி வீதி, யாழ்ப்பாணம். (15258)

### உடன் தேவை

பெண்கள் குழந்தைகள் ஆகியோரது சகல உடைகளையும் நாகரீகமான முறையில் வெட்டி தைக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த பெண் தேவை. நேரில் வரவும், 'திருமகள் ரேடர்ஸ்' (கஸ்தூரியார் சந்தை அருகில் உள்ள பெற்றோல் செட் முன்) கல்வியங்காடு. (15185)

### நியூ விக்ரேஸ்

மேற்படி ஸ்தாபனத்திற்கு எலக்ரோனிக் மணிக்கூடுகள் திருத்துவதற்குதேர்ச்சிபெற்றவர்கள் உடனடியாகத்தேவை தொடர்பு கொள்ளவும்! நியூ விக்ரேஸ் B. M. C. ஒழுங்கை, தேவா வீதி, யாழ்ப்பாணம். [சி/5558]

### புதிய வகுப்புக்கள்

1991 ஆம் ஆண்டிற்கான 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம் ஆண்டிற்குரிய வகுப்புக்கள் 24-12-90 காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகின்றன; அறிவொளி கல்விக் கழகம் 150, கோவில் வீதி, நல்லூர். [15256]

### திருமண சேவை

பல தொழில்களில் உள்ள இரு பாலாரின் ஜாதகக் குறிப்புக்கள் எம்மிடம் உண்டு. இச்சேவையைத் தெய்வீக அனுமதியுடன் நடத்துகின்றேன். எனவே, பெற்றோர்கட்குக் கவலை வேண்டாம் தொடர்புகொள்ளவும். சுவாமியார் அம்பலவாணர் இராசகுலசிங்கம், 53/5, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம். [15251]

### சன்லைட் றைக்கிளினர்ஸ்

யாழ். நகரில் தமது வழமையான சேவைகளை [போட்டோ ஸ்ரற் பிரதிகள் எடுப்பது உட்பட] ஆரம்பித்துள்ளனர்; என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன். 23, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C/5553)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள், 'சக்தி சரவணா' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக]. தினசரி பகல் 9 மணி தொடக்கம் 1 மணிவரை சந்திக்கலாம்; வியாழன் விடுமுறை. (15153

### ஜோதிடம்

''சனி மாற்றம்'' எல்லா ராசிகளின் பலன்கள்- ரூ 4/00 எங்கும் கிடைக்கும். நூலாசிரியர்:- [ஆத்மஜோதி] Prof: சத்தியதாஸன், ஞானம் ஸ்ரோர்ஸ், சித்தன்கேணி சந்தி. (14909[

## நவாலி வை.எம்.சி.ஏ. உதவி

நவாலி, டிச. 23

குவைத்திலிருந்து வேலை இழந்து வந்தோருக்கு நவாலி வை.எம்.சி.ஏ. நிவாரணப் பொருள்களை வழங்கியது.

நவாலி கிராம சேவையாளர் பிரிவிலுள்ள சுமார் 50 பேருக்கு உலர் உணவுப் பொருள்கள் நிவாரணமாக வழங்கப்பட்டன. [இ-100]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**வீரவேங்கை ★ லக்னா ★**

**(பாலச்சந்திரன் பிரேமினி).**

தாயின் மடியில்: 1975 - 01 - 15

ஈழ மண்ணில்: 1990 - 11 - 24

துள்ளித் திரியும் பருவத்தில் சுதந்திர வேட்கையால் தமிழீழம் காணப் புறப்பட்ட எமதருமை மகளே பிரேமினி! வீறுகொண்ட வேங்கையாகி மாங்குளம் சிங்கள இராணுவத்தை அழித்தொழித்து சரித்திரம் படைத்துவிட்டாய் அம்மா!

மாவீரர் கனவை நனவாக்கி மாவீரராகிவிட்டவளே உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உனது பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள், உறவினர்கள்.

கல்வயல்,
சாவகச்சேரி. (15263)

## மங்களகரமான ★ திறப்பு விழா ★

இன்று (23-12-1990) ஞாயிற்றுக்கிழமை
நண்பகல் 12 மணியளவில்
கோலாகலமாக திறந்து வைக்கப்படுகின்றது

## ஜெயசித்தாரா உணவகம்

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)

உங்களுக்குத் தேவையான:
உள்ளூர், வெளியூர் உணவுகளுக்கும் மற்றும் பல்வகை உணவுப் பொருள்களுக்கும் நாடுங்கள்!

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். [சி-5556]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அகலா ஜனனம்: 06 - 04 - 1978

அகால மரணம்: 23 - 11 - 1990

**செல்வன் செல்வராசா சசிக்குமார்**

[யாழ். மத்திய கல்லூரி 7 ஆம் ஆண்டு மாணவன்]

ஏற்றும் பொற் றலைமகனே! எதிரிக் ஹெலியுன்னைக் கூற்றுவனாய் வந்து கொன்றொழித்த நாளெமக்கு நேற்றுப்போ லின்றும் நினைவை நெருடுவதால் ஆற்றாமல் கண்ணீர் ஆறாய்ப் பெருகுதடா!

அன்னியனால் சிதைக்கப்பட்ட உமது மறைவால் ஆற்றொணாத் துயருறுவதுடன் உமது அன்பின் ஆத்ம ஈடேற்றத்திற்காகப் பிரார்த்திக்கும்:

உமது
அன்பு அப்பா, அம்மா, சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள்;

''மாயவன் டிரான்ஸ்போட்''
சங்கானை வீதி, அச்சுவேலி. [15179]

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 02 - 04 - 1904

இறப்பு: 02 - 01 - 1990

திதி: 23 - 12 - 1990



**இராமனாதர் - சுப்பிரமணியம்**

(முன்னாள் அதிபர், கிராமசபைத் தலைவர், நெடுந்தீவு.)

அறிவுச் சுடராய், அன்பின் பொக்கிஷமாய், மாறாத புன்சிரிப்புடன், ஆன்றோர் சபைதனில் தலைமை தாங்கி, ஆலவிருட்சம் போல் நின்று எம்மைக் காத்த தெய்வமே! உமது ஆத்மா இந்நாளில் சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கிறோம்.

மனைவி, குடும்பத்தார்.

112/10, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம். [15174]

## ஆதீனத்தில் திருவெம்பாவை

யாழ்ப்பாணம், டிச. 23

இன்று ஆரம்பமாகும் திருவெம்பாவையையொட்டி, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் தினமும் விசேஷ நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியுள்ளன.

அதிகாலை 4 மணிக்கு விசேட பூசையுடன் ஆரம்பமாகி திருவெம்பாவை ஓதல், பூசை திருவிழா என்பன நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்கு திருவாதவூரடிகள் பூராண படனம் இடம் பெறும். [அ]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கூட்டுறவுத் தந்தை
அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்

பிறப்பு:- 27 - 10 - 1906

இறப்பு:- 23 - 11 - 1990

ஏழை மக்களின் வாழ்க்கை மேம்பட
கூட்டுறவுக்காய் உழைத்திட்ட பெரியோய்
உம் மறைவு நியமமானாலும்
எம் நினைவு என்றும் தொடரும்

புத்தூர் ஸ்ரீ குமரகுருபரன்
சேமிப்புக் கழகம். [15199]

## நன்றி நவிலல்

23/11/1990 சிவபதம் அடைந்த திரு. சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் இக்கட்டான சூழ் நிலையிலும் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை பிரசுரித்தவர்களுக்கும், மலர் மாலை, மலர்வளையங்கள் அணிவித்தவர்களுக்கும், இரங்கல் உரையாற்றியவர்களுக்கும், இறுதியாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும், யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களுக்கும், உலர் வலைய அபிவிருத்தி மன்ற உறுப்பினர்களுக்கும், ப. நோ. கூ. சங்கத்தினருக்கும், ஏனைய கூட்டுறவாளர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
தாய், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்.

10/1 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [15257]

## நினைவு அஞ்சலி

5ஆம் ஆண்டு 31ஆம் நாள்





**திரு. தம்பையா தில்லைநாதன்**
மண்ணில்: 20-12-1905
விண்ணில்: 18-12-1985

**திருமதி பொன்னம்மா தில்லைநாதன்**
மண்ணில்: 15-11-1906
விண்ணில்: 23-11-1990

''வாழ்வில் வழிகாட்டியாய் நீங்கள் இருவரும் விண்ணில் நின்றும் எங்களை வழிகாட்டி ஆசீர்வதிக்க ஆண்டவனை வேண்டுகிறோம்''

உங்களின் ஆத்ம சாந்திக்காக என்றென்றும் பிரார்த்திக்கும்;
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஏ. ஜி. ஏ. அலுவலக ஒழுங்கை,
சண்டிலிப்பாய்,
23-12-1990.

குறிப்பு:

23-11-90 அன்று சாவிபதம் எய்திய எமது அன்புக்குரிய அன்னையின் ஈமக்கிரியைகளில் கலந்தும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியும், மலர் மாலைகள் சூட்டியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மற்றும் பல்வேறு வகைகளிலும் ஆதரவு தந்தும் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது பணிவன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். [சி-5555]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org